V8T www.Padasalai.Net www.TrbTnpsc.com

# விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
## முழு ஆண்டுத் தேர்வு - 2023

### வகுப்பு 8
### தமிழ்

கால அளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10×1=10**

1) பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள் ..........
அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

2) முழவு + அதிர என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........
அ) முழவதிர ஆ) முழவுதிர இ) முழவுஅதிர ஈ) முழவுதிரை

3) கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ..........
அ) அச்சம் ஆ) வீரம் இ) மகிழ்ச்சி ஈ) நாணம்

4) இரட்டுற மொழிதல் அணியின் வேறுபெயர் ......... அணி.
அ) உவமை ஆ) பிறிதுமொழிதல் இ) சிலேடை ஈ) வேற்றுமை

5) அடுத்தவர் வாழ்வைக் கண்டு ......... கொள்ளக்கூடாது.
அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்

6) 'பாலாடை' இச் சொல்லுக்குரிய புணர்ச்சி ..........
அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

7) பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று .........
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

8) செவ்விந்தியர்கள் நிலத்தைத் ............. மதித்தனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

9) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ..........
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

10) அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ............. விருது வழங்கியது.
அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்மவிபூசன் ஈ) பத்மபூசன்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக** **5×1=5**

11) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ........
12) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ......... இன்பம் ஆகும்.
13) மாங்கனி நகரம் என்று அழைக்கப்படும் நகரம் ..........
14) அரசரை அவரது .......... காப்பாற்றும்
15) பொருளாதாரம் படிப்பிற்காக அம்பேத்கர் ......... சென்றார்.

**இ) பொருத்துக.** **5×1=5**

16) கலிப்பா - மண்ணால் குதிரை செய்தான்
17) வஞ்சிப்பா - பாரியினது தேர்
18) விளித்தொடர் - துள்ளல் ஓசை
19) ஆறாம் வேற்றுமை - தூங்கல் ஓசை
20) மூன்றாம் வேற்றுமை - புலவரே வருக

### பகுதி - 2

**க) குறுகிய விடையளி.**

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

21) இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?
22) மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?
23) யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
24) சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?
25) உலகம் எவற்றால் ஆனது?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி:** **4×2=8**

26) அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?
27) திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?
28) 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
29) திரு.வி.க. சங்க காலப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
30) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக.

**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** **2×2=4**

31) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
32) பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
33) வேற்றுமை அணி என்றால் என்ன?

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - 3

**உ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

**அ) சிறுவினா:** 3x4=12

34) அ) மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

(அல்லது)

ஆ) நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

35) அ) எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

36) அ) ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

(அல்லது)

ஆ) இருவகை அசைகளையும் விளக்குக.

**ஆ) சிந்தனை வினா: (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** 2x5=10

37) ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமானால் மக்களிடம் இருக்கவேண்டிய உ... பண்புகள் யாவை?

38) நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?

39) நில வளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவை... யாவை?

## பகுதி - 4

**ஊ) அடிபிறழாமல் எழுதுக..** 4+2=6

40) அ) 'ஒன்றே குலமும்' முதல் 'உய்ம்மினே' முடிய உள்ள ஒன்றே குலம் மனப்பாடப் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) 'வாழ்க நிரந்தரம்' என்னும் தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.

41) 'தொடர்பு' என முடியும் குறளை எழுதுக.

## பகுதி - 5

**எ) மொழிப்பயிற்சி: (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)** 4x2=8

42) **கலைச்சொல் தருக.**

அ) Confidence ஆ) Awareness

43) **இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.**

அ) அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்க வேண்டும். அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்

ஆ) மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

44) **உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.**

அ) நிழலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்

ஆ) தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இனிமையானது.

45) **உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.**

அ) மடை திறந்த வெள்ளம் போல்

ஆ) குன்றின் மேலிட்ட விளக்கைப் போல

46) **தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.**

அ) பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்து விட்டனவே!

ஆ) கடமையைச் செய்.

47) **சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

அ) சோறு ............ (தின் / உண்)

ஆ) கூகை ........... (கூவும் / குழறும்)

## பகுதி - 6

**ஏ) விரிவான விடையளி.** 3x8=24

48) அ) வாழும்முறை, சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

49) அ) குழந்தை கிருஷ்ணாவின் பண்புநலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

50) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்தில் உள்ளவை - படிக்கும்முறை - முடிவுரை.

(அல்லது)

ஆ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com